


புதுடெல்லியில், நேற்று (08.01.2026) இந்திய வர்த்தக மேம்பாட்டு சபை சார்பில் நடைபெற்ற பால்பண்ணை செயலாக்கம் மற்றும் தொழில்நுட்பம் குறித்த சர்வதேச மாநாட்டில், பால்வளத்துறையில் நிலைத்தன்மை மற்றும் விவசாயிகள் நலனை ஊக்குவிக்கும் மாநில அரசின் சிறந்த தலைவருக்கான விருது, மற்றும் ஆவின் நிறுவனத்துக்கு 2026 ஆம் ஆண்டிற்கான சிறந்த மாநில கூட்டுறவு நிறுவன "டெய்ரி டைடன் விருது ஆகியவை பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் அவர்களிடம் வழங்கப்பட்டது.



திருவள்ளூர் மாவட்டம், ஆவடி பட்டாபிராம் டி.ஆர்.பி.சிசிசி இந்து கல்லூரியில் தமிழ்நாடு அரசின் முன்னோடி திட்டமான 'உலகம் உங்கள் கையில்' உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தில் 2034 மாணவர்களுக்கு சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மடிக்கணினிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி , டி.ஜே.கோவிந்தராஜ் ஆவடி மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா, ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், மண்டல குழு தலைவர்கள் ஜி.ராஜேந்திரன், வி அம்மு, என்.ஜோதிலட்சுமி, அமுதா பேபி சேகர் , கே.ஜெ.ரமேஷ், சன்.பிரகாஷ், பொன்விஜயன், ஜி.நாராயணபிரசாத், பேபிசேகர், சி.ஜெரால்டு, எஸ்.ஜெயபாலன், ப.ச.கமலேஷ், மற்றும் கல்லூரிகளின் முதல்வர்கள், பேராசிரியர்கள் மற்றும் திரளான மாணவமாணவியர்கள் உள்ளனர்.

### சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ் ரூ.20.19 கோடி மதிப்பீட்டில்

# புதியதாக கட்டப்பட உள்ள அதிநவீன வசதிகளுடன் கூடிய இறைச்சிக் கூடம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அடிக்கல் நாட்டினார்!



சென்னை,ஜன.9-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (08.01.2026) அடையாறு மண்டலம், சைதாபேட்டை ஆலந்தூர் சாலை ஆடு தொட்டியில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தில் ரூ.20.19 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்படவுள்ள நவீன இறைச்சிக் கூடம் கட்டும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

அதிநவீன இறைச்சிக்கூடம் கட்டிடம்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட சைதாப்பேட்டையில் பெயர் பெற்ற ஆட்டு தொட்டி என்னுமிடத்தில் ரூ.20.19 கோடியில் 25,000 சதுர அடி பரப்பளவில் அதிநவீன இறைச்சிக் கூடம் கட்டும் பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த ஆட்டு இறைச்சி கூடம் 1960 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்டது. இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அப்போது துணை முதலமைச்சராக இருந்த போது 2006ஆம் ஆண்டு ரூ.9 கோடி செலவில் மிகப் பெரிய அளவில் நவீனப்படுத்தப்பட்ட ISO தரச்சான்றிதழ்களுடன் கூடிய ஆட்டிறைச்சி கூடமாக மாற்றப்பட்டது. தொடர்ந்து தற்போது பெருகிவரும் மக்கள் தொகை, அதேபோல் வியாபாரம் கூடுதல் படுத்தப்பட்டு வரும் நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்த அதிநவீன இறைச்சிக் கூடத்தில் பல்வேறு புதிய தொழில் நுட்பத்துடன் சுத்தமான பரிசோதிக்கப்பட்ட இறைச்சி மக்களுக்கு வழங்கப்பட உள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிங்கார சென்னை 2.0 எனும் திட்டத்தின்கீழ் இந்த அமைப்பு உருவாக்கப்பட உள்ளது. இந்த அதிநவீன இறைச்சி கூடத்தில் ஒரே சமயத்தில் 700 ஆடுகள் இறைச்சிக்காக தயாராகும் வகையில் 105 கொக்கிகளுடன் 8,600 சதுர அடியில் ஒரு கூடம் அமைகிறது. ஆட்டு இறைச்சிகளை ஜட்கா மற்றும் ஹலால் முறையில் தயார் செய்யும் வகையில் இக்கூடத்தில் வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளது. அதேபோன்று இறைச்சியை குளிரூட்டி பதப்படுத்தும் முறையும், Cold Storage என்கின்ற வகையில் பதப்படுத்தி வைப்பதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் 16 Retail Shop என்னும் சிறுவணிக கடைகளும் கட்டப்பட உள்ளது. இறைச்சைகளை விநியோகம் செய்வதற்கும் அறைகள் கட்டப்பட உள்ளது. இந்த அரசு தொழிற்சாலைகளில் சுற்றுச்சூழல் மேலாண்மை நடைமுறைப்படுத்துவதில் தனி கவனம் செலுத்துகிறது. அந்தவகையில் இங்கே வெளியேறும் அசுத்த நீர் 7 KLD Effluent Treatment Plant அமைக்கப்பட்டு அதில் சுத்திகரிக்கப்பட உள்ளது. மேலும் 7000 லிட்டர் கொள்ளளவு உள்ள உயர்மட்ட தண்ணீர் தொட்டி அமைக்கப்பட உள்ளது. இங்கே கிடைக்கப்பெறும் தோல்கள் மற்றும் இதர பயன்பாடு உள்ள உறுப்புகள் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு, கூடுதல் வருவாய் ஈட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த நவீன இறைச்சி கூடத்தில் கால்நடை ஆய்வகம் ஒன்றும், கால்நடை மருத்துவர்களுக்கு ஒரு அறையும் கட்டப்பட உள்ளது. ஏற்கெனவே இங்கு இயங்கி வந்த இறைச்சி கூடமானது மிகவும் குறுகிய இடத்தில் செயல்பட்டு வந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று தற்சமயம் இந்த இறைச்சி கூடமானது நவீனமும், சுகாதாரத்தோடும், நிலையான நீடித்த சுற்றுச்சூழல் அமைப்பும் ஒருங்கே பெற்று இறைச்சி தயாரிக்கும் முறை மிகவும் நேர்த்தியாகவும், பொது சுகாதாரம் பாதிக்காத வகையில் புதிய விதிமுறைகளை கடைப்பிடித்து ஒரு சிறந்த இறைச்சி கூடமாக அமைய உள்ளது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.ப்ரியா, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர்(பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், மண்டலக்குழுத் தலைவர்கள் ஆர்.துரைராஜ், கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார் மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### குன்றத்தூர் மத்திய ஒன்றிய இளைஞர் அணி - மாணவர் அணி சார்பில்

# மாபெரும் இரண்டு நாள் கபடிப் போட்டி! அமைச்சர் தா.மோ.அன்பரசன் பரிசு வழங்குகிறார்!

## திருமுடிவாக்கம் ஏ.மணி துவக்கி வைக்கிறார்! படப்பை ஆ.மனோகரன் - கே.ஜி.பாஸ்கர்சுந்தரம் பங்கேற்பு!

காஞ்சிபுரம், ஜன. 09

குன்றத்தூர் மத்திய ஒன்றிய இளைஞர் அணி மற்றும் மாணவர் அணி சார்பாக மாபெரும் இரண்டு நாள் கபடிப் போட்டி இன்று (09.01.2026 முதல் 11.01.2026) வரை, மாலை 6:00 மணிக்கு, திருமுடிவாக்கம் பைபாஸ் சாலை மைதானம் நடைபெறுகிறது.

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ப.அறிவொளி தலைமை வகிக்கிறார்.

ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் போ.ஜெகன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

மா.சே.பிரகாஷ், பொன்.இளைய பாரதி, இரா.குமரவேல், ஏ.பாலாஜி, செ.பார்த்திபன், மு.பொன்மணி, கோ.தீபக், ர.தேவதர்ஷினி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியை குன்றத்தூர் மத்திய ஒன்றியப் பொறுப்பாளர் திருமுடிவாக்கம் ஏ.மணி துவக்கி வைக்கிறார்.

விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்து கொண்டு பரிசுகள் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தொகுதி பார்வையாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், சரஸ்வதி மனோகரன், வந்தே மாதரம், உமா மகேஸ்வரி, வந்தேமாதரம், கோல்டு டி.பிரகாஷ், எல்.பிரபு, ப.இராமமூர்த்தி, சங்கீதா, வேலு, தினேஷ் கந்தசாமி, மு.சுப்பிரமணி, செல்வமணி, வி.அரி, க.ஏழுமலை, வாசுகி, மகேஷ், மா.பரிமேலழகன், எ.விஸ்வநாதன், கே.எம்.சி.சத்தியமூர்த்தி, பொன்.இரமேஷ் கவி, கு.ஏழுமலை, ச.பாலகிருஷ்ணன், லட்சுமி ஞானசேகரன், எஸ்.வைரம், ஜி.எ.ராயப்பா, மூ.குமார், ஷோபா ரகுநாதன், ஏ.இ.பரசுராமன், ச.ரஞ்சித்குமார், இரா.சந்திரசேகர், இர.தமிழ்தாசன், க.யுவராணி, லட்சாவதி, கருணாகரன், வி.அன்பு, க.அன்பழகன், மலர்விழி முருகன், தெ.அரி கிருஷ்ணன், ஆரிக்கம் ஜெயபால், மீனா, மோகன், சீலா தனசேகரன், சுமதி வைத்தீஸ்வரன், உமா சத்தியமூர்த்தி, கே.தியாகராஜன், ப.வைத்தியலிங்கம், ஜீவிதா சுரேஷ், ஞானமணி சகாயராஜ், சீ.கோவிந்தராஜ், பூங்கொடி பொன்னம்பலம், நளினி பாக்யராஜ், சுபா முத்து பாலகிருஷ்ணன், ம.ஸ்டாலின், ஆனந்த லட்சுமி ராம்தாஸ், பவானி ஞானசேகரன், டி.ஸ்ரீதர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

### அ.ம.துரைவீரமணி தலைமை! இரா.வினோத் வரவேற்புரை! வில்லிவாக்கம் ஊராட்சி தி.மு.க. –

# எம்.கே.எஸ். அகாடமி சார்பில் அரசின் திட்டங்களை விளக்கி மாபெரும் வண்ண கோலங்கள்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி - அமைச்சர் மா.சுப்பிரமணியன் - காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. பரிசு வழங்குகின்றனர்!

சென்னை, ஜன. 09

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, அயப்பாக்கம் ஊராட்சி தி.மு.க. மற்றும் எம்.கே.எஸ். அகாடமி இணைந்து நடத்தும் திராவிட மாடல் 2.0 பொங்கல் திருவிழா தமிழ்நாடு வெல்லும் திட்டங்களை வண்ணக் கோலமிட்டு 2026 பானைகளில் கழக மகளிர்கள் ஒன்றிணைந்து கருப்பு, சிவப்பு வண்ணத்தில் சேலை அணிந்து சமத்துவப் பொங்கல் வைக்கும் மாபெரும் விழா இன்று (09.01.2026 வெள்ளிக்கிழமை) மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை, திருவள்ளூர் அடுக்கு மாடி குடியிருப்பு அருகில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் திடலில் நடைபெறுகிறது.

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் இரா. வினோத் வரவேற்புரை ஆற்றுகிறார்.

எஸ்.பி.அருள், ந.ஜெயச்சந்திரன், எம்.ஜி.சாமிநாதன், ஏ.எம்.யுவராஜா, ஆர்.கௌரி சங்கர், என்.ரவி, க.சங்கர், மாறன் கே.எஸ்.குமார், கு.சதீஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஒன்றியக் கழகச் செயலாளர், எம்.கே.எஸ். அகாடமி நிறுவனத் தலைவர் அ.ம.துரை வீரமணி தலைமை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, 11 வது மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், தொகுதி பார்வையாளர் பி.டி.பாண்டி செல்வம் ஆகியோர் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டி பரிசுகள் வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் எஸ்.அருணாச்சலம், இராமாபுரம் வ.செல்வகுமார், எஸ்.பத்மபிரியா, அ.ம.துரைவேலு, முகப்பேர் கே.நீலகண்டன், வழக்கறிஞர் எஸ்.வடிவேல், என்.தனசேகரன், அ.விஜயபாலா, கே.குமரேசன், வி.ராஜேஷ் மற்றும் மதுரவாயல் தெற்கு வடக்கு பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், மதுரவாயல் தெற்கு வடக்கு பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வானகரம் ஊராட்சி முன்னாள் இந்நாள் கழக நிர்வாகிகள், அடையாளம்பட்டு ஊராட்சி முன்னாள் இந்நாள் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் இன்னிசை நிகழ்ச்சி, நாட்டுப்புற கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள், பரதநாட்டியம் நடைபெறுகிறது.

டி.ஐசக் நேசகுமார், ஏ.சுந்தரமூர்த்தி ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

### கனிமொழி கருணாநிதி பிறந்தநாள்! மலேசியா தளபதி பேரவை சார்பாக

# நல உதவிகள் - அறுசுவை உணவு வழங்கல்!

கோலாலம்பூர், ஜன.9-

கழகத் துணை பொதுச் செயலாளர் நாடாளுமன்றக் கழக குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பிறந்தநாள் விழா மலேசிய தளபதி பேரவை சார்பாக கொண்டாடப்பட்டது.

ஜொகுர்பார்ஸ்குடாயில் மலேசியா தளபதி பேரவை செயலாளர் ஹச் எம்.ஜெய்னுதீன், மகளிர் அணி சார்ந்த நித்தியா தலைமையில் துப்புரவு தொழிலாளர்களுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

நிகழ்வில். முகமது புகாரி பைசல்ராஜா, பழனி, சத்தியமூர்த்தி, திவாகரன், சந்தியா, மஞ்சுளா மற்றும் ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து தைப்பிங்கின் பொருளாளர் சிவானந்தம், பர்வீன் தலைமையில் முதியோர் இல்லத்தில் காலை உணவு, மதிய உணவு மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

நிகழ்வில். ராம்குமார், எம். தினேஷ், சென்னப்பன், பாரூக், செல்லப்பா, தேவி, கனிமொழி, தேவேந்திரன், ஆயிஷா மற்றும் ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சிரம்பானில் இளைஞர் அணி, அபுதாகிர் தலைமையில் இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

நிகழ்வில் தன்ராஜ், கலியமூர்த்தி, சபீர் அலி மற்றும் ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பினாங்கில் பொதுக் குழு புருஷோத்தமன் தலைமையில் மதிய உணவு வழங்கப்பட்டது.

நிகழ்வில் அசாருதீன், தனபால், செந்தாமரை, பர்சாத்அலி, சதீஷ் முருகன், திருவையாறு மடம், தெய்வானை, கனிமொழி, பவித்ரா, ரேகா, திருச்சி வரகனேரியில் ஏ.அசாருதீன், எம்.இக்பால்ஷா மார்க்கெட் பாஸ்கர், சதீஷ்குமார், மார்க்கெட் பாபு, செல்லப்பாண்டி, நைனா முகமது, கமல் பாஷா ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஆலந்தூர் தெற்கு பகுதி 167 வது வட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய பாகங்களின் ஆலோசனைக் கூட்டம் 06.01.2026 பாக முகவர்கள் துரைராஜ் (353), சரவணன் (357), அசோக் குமார் (358), அரசு (387) ஆகியோர் தலைமையிலும், வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன், துர்காதேவி நடராஜன் எம்.சி., மாவட்ட பிரதிநிதிகள் ரமணா, அபிஷே கிருஷ்ணா, மா.அ. நிர்வாகிகள் பிரான்சிஸ், சாய் பிரசாத், முன்னிலையிலும், நங்கநல்லூர் கண்ணன் நகர் 1வது பிரதான சாலையில் அமைந்துள்ள அதித்தி மஹாலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தொகுதி பார்வையாளரும், மாநில தகவல் தொழில்நுட்ப அணியின் துணை அமைப்பாளர் திருமதி எஸ்.பத்மப்ரியா, ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12–வது மண்டல குழு தலைவருமான, அண்ணன் என். சந்திரன், ஆலோசனை வழங்கினார்கள். இக்கூட்டத்தில் BLC, BDA, பாகமுகவர்கள், நலசங்க நிர்வாகிகள் , வட்ட நிர்வாகிகள், பகுதி அணிகளின் நிர்வாகிகள், அனைவரும் கலந்து கொண்டனர்.

### ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ. பங்கேற்கிறார்

# தியாகராயர் நகர் 131வது வட்டத்தில் பாக முகவர்கள் கூட்டம்!


## வட்டச் செயலாளர் மு.ம.செந்தில்குமார் அறிக்கை!

சென்னை, ஜன.9-

முதலமைச்சர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையை ஏற்று 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாடி', 'தமிழ்நாடு தலைகுனியாது' என்னும் முன்னெடுப்பில் இன்று 09.01.2026 மாலை 6.00 மணிக்கு காசிகுளம் பகுதியில் பாகம் எண் 105ல் பாக முகவர் பாரதி முன்னிலையில் நடைபெறுகிறது.

தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., தியாகராயர் நகர் மேற்குப் பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., தியாகராயர் நகர் கிழக்கு பகுதி அவைத்தலைவர் மு.மணிவண்ணன், 131வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி மணிவண்ணன் எம்.சி. ஆகியோர்கலந்துக் கொண்டு என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாடி குறித்து ஆலோசனைகளை வழங்குகிறார்கள்.

கூட்டத்தில் 105-வது பாகத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், BLA2, BDA நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொள்கிறார்கள் என்று 131வது வட்ட செயலாளர் மு.ம.செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.



தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் சட்டமன்ற தொகுதி, 100 வது வட்டத்தில் பொதுமக்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் ஏற்பாட்டில் கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் இல்லங்கள் தோறும் சென்று நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் வடக்கு பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், வட்டச் செயலாளர் ஆ.ஏகாம்பரம், மாமன்ற உறுப்பினர் வசந்தி பரமசிவம் , மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் குட்டி (எ) சுப்பிரமணி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி 4வது வட்டத்தில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பாக நிர்வாகிகள் கூட்டம் வட்டச் செயலாளர் கே.பவுல் தலைமையில் பகுதிச் செயலாளர் வை.ம.அருள்தாசன் சிறப்புரையாற்றி கலந்து கொண்ட நிர்வாகிகளுக்கும் பொதுமக்களுக்கும் அறுசுவை விருந்து வழங்கினார். இதில் மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.ஆறுமுகம், எம்.ராம்குமார், வட்ட கழக நிர்வாகிகள் ஏ.அப்துல்காதர், டி.கர்ணன், குருசாமி, கார்த்திக், இமானவேல், பி.எம்.ஹரி, ஆர்.அழகிரி, டி.சதீஷ்குமார், ஜி.பூங்கொடி, விக்கி, கண்ணன், எம்.மாரிமுத்து, இ.கார்த்திக், அப்பு (எ) சுரேஷ், தகவல் தொழில் நுட்ப அணி பிரியா, கார்த்திக், மற்றும் கழக நிர்வாகிகள் மூத்த முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர். பகுதி பிரதிநிதி க.சோழன், எஸ்.பரந்தாமன், வி.விஜயராஜா, ஆகியோர் நிகழ்ச்சிகான ஏற்பாட்டினை செய்து இருந்தனர்.